**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு - 2018**

---

## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இவ்வறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் நான் அபிப்பிராயம் தெரிவிக்க மறுத்துள்ளேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழ் எனது பொறுப்பு இவ்வறிக்கையில் இந் நிதிக்கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை முன்னிட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையில் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகள் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம்

மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு பணியகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பணியகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் ஆணைக்குழுவின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பணியகத்தின் கட்டுப்பாட்டு பணியகத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| (அ) பிந்திய ஊழியர் நலன்களுக்காக ஒதுக்கீடுகள் செய்வதற்குரிய கணக்கீட்டுக் கொள்கையானது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 09 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் | இலங்கை கணக்கீட்டு நியமத்தில் காட்டப்பட்டுள்ளவாறு 2018-12-31 இல் ஊழியர் பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக திருத்திய ஒதுக்கீடு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிந்திய ஊழியர் நலன்களை ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு கொள்கையை இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நியமங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு இணக்கமற்ற வகையில் ஊழியர்களின் சேவைக்காலம் மற்றும் கடைசியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட சம்பளத்தில் அரைவாசியாக மீளாய்வாண்டின் போது பிந்திய ஊழியர் நலன்களாக ரூபா 17 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | அதற்கிணங்க ஒதுக்கீடுகள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்களின் நியாயப் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 4,586,223 கிரயமான கட்டிடங்கள் நியாயப் பெறுமதிக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டின் போது நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் மீள் மதிப்புச் செய்யப்பட்ட பெறுமதியை கவன்திற்கு எடுத்தக் கொள்வேன். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் சபையின் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு மீள்மதிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டியவ வட்டி வருமானம் ரூபா 33,546,865 தொகை, | திருத்திய காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பணமாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 151,435,201 தொகையான வட்டி வருமானம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற தேறிய காசுப்பாய்ச்சலில் கழித்துக் காட்டப்பட வேண்டிய போதிலும், பெற வேண்டிய வட்டிக்கணக்குகளின் ஆரம்ப மீதிக்கும் இறுதி மீதிக்குமிடையேயான வித்தியாசமாகிய ரூபா 29,982,748 மாத்திரம் கழித்துக் காட்டப்பட்டதன் காரணமாக காசுப் பாய்ச்சல் ரூபா 154,999,308 ஆல் அதிகரித்தும் முதலீட்டு நடவடிக்கைகளின் காசுப் பாய்ச்சல் ரூபா 151,435,201 ஆல் குறைத்தும் பதியப்பட்டிருந்தது. | வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இலக்கம் 02 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நிதிநிலைமைக்கூற்றில் உள்ளடக்கப்படாத பெறுமதி ரூபா 258,353 தொகையான செலவு மீதியானது காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களின் கீழ் பதியப்பட்டதன் காரணமாக அப்பெறுமதியால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசுப்பாய்ச்சல் அதிகரித்து பதியப்பட்டிருந்தது. | திருத்திய காசுப் பாய்ச்சல் கூற்றில் சரியாகப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பணமாகப் பெற்றுக் கொண்டவை களையும் பணமாகக் கொடுப்பனவு செய்தவைகளையும் இனங்கண்டு காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரித்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் களுத்துறை மாவட்ட காணி மறுசீரமைப்பு அதிகார சபைக்கு மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா | கருங்கற்களை குத்தகைக:கு வழங்குதல் இடம்பெற்ற செயற்திட்ட | சரியான தகவல்களைப் பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| 11,799,600 தொகையான கருங்கல் வருமானம் கணக்குகளில் பதியப்படாததன் காரணமாக அப்பெறுமதியால் மீளாய்வாண்டிற்கான இலாபம் குறைத்து பதியப்பட்டிருந்தது. | பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சரி செய்யவுள்ளேன். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.3 அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| (அ) 2011 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட 11/நானாவிதம் (015-1) ஆம் இலக்க அமைச்சரவைத் தீரமானத்தின் பிரகாரம் 05 ஏக்கர்களுக்கு மேற்பட்ட காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது சபையினதும் அமைச்சரவையினதும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இன்றி களுத்துறையில் அமைந்துள்ள மெத்தகெதர தோட்டத்தின் 80 ஏக்கர் காணி 04 குத்தகைகாரர்களுக்கு தென்னை, தேயிலை, தாழை மற்றும் கலப்பு பயிர்ச்செய்கைக்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அக்காணிகளுக்காக அரசாங்க மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் | ஆணைக்குழு அங்கீகாரத்துடன் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருந்தும் இன்று வரை அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் முறைப்படி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து சரியான மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்படாததன் காரணமாக ரூபா 1,478,000 தொடக்க பெறுமதியை பெற்றுக் கொள்வதற்கு மேலதிகமாக வருடாந்த குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | சபையின் ஒலபொடுவ, யஹல கெலே, இங்கிரிய ஆகிய தோட்டங்களின் 22 ஏக்கர் காணியில் அமைந்துள்ள கருங்கற்கள் 2001, 2004, 2005 ஆகிய ஆண்டுகளின் போது குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் மில்லனிய ஹோரேகந்த தோட்டத்திற்குரிய 10 ஏக்கர் காணியில் அமைந்துள்ள கருங்கல் 2003 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை உத்தரவின்றி அகழ்வு செய்யப்பட்டிருந்தது. குத்தகைக்காரர்களினால் குத்தகைப் பணம் செலுத்தாமை மற்றும் உரிய நிறுவனத்தின் பேரில் மூலம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமையின் காரணமாக சபை உரிய உடன்படிக்கையை இரத்துச் செய்திருந்தும் அத்துமீறிய அகழ்தல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டின் நவம்பர் 30 ஆந் திகதி வரை அறவிட வேண்டிய நிலுவையான குத்தகைப் பணம் ரூபா 47,433,565 ஆக இருந்தது. | ஆணைக்குழுவின் அங்கீகாரமின்றி இக்காணிகளில் பேணப்பட்டு வந்த கருங்கல் வேலைத்தளங்கள் அனைத்தையும் நிறுத்துவதற்கும் அறவிட வேண்டிய அனைத்து பணத்தையும் ஆணைக்குழுவிற்கு செலுத்துபவர்களுக்கு மாத்திரம் உரிய அனுமதியை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முறைப்படி திட்டத்தை ஒப்படைப்பதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு அளவை செய்தல் கட்டளை வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த அளவை செய்தல் கட்டளைக்குரிய கணிப்பீட்டையும் மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றாடல் அங்கீகாரத்தின் பேரில் முறைப்படியாக குத்தகைக்கு வழங்க வேண்டியிருத்தல் மற்றும் அச்செயற்திட்டம் தொர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) ஆணைக்குழுவின் மெத்தேகெதர தோட்டத்தில் 04 ஏக்கர் 03 ரூட் 03 பேர்ச்சர்ஸ் அளவான காணி வெளித்தரப்பினர்களால் 2002 ஆம் ஆண்டிலிருந்து அத்துமீறிப் பயன்படுத்தப்படு வந்ததுடன் உரிய தரப்பினர்களால் அக்காணியில் 04 அறைகள் 10 மண்டபங்கள் இயற்கையான குளிக்கும் தடாகங்களுடன் ஒரு ஹோட்டல் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 10 பேர்ச்சர்ஸ் பரப்புள்ள குளிக்கும் தடாகமும் மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்டு வந்தன. இக்காணியை கைப்பற்றுவதற்கு அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆணைக்குழுவினால் பின்பற்றப்பட்டு வரும் காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடைமுறைக்கு இணங்க குத்தகை உடன்படிக்கையின் மூலம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2002 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அத்துமீறல்களை இனங்காண்பதற்கு மாவட்ட உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்கான தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கும் முறையான வேலைத்திட்டத்தை தயாரித்து அத்துமீறிப் பயன்படுத்துதல் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 பொருத்தமற்ற மதிப்பாய்வு அல்லது மதிப்பீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| 1972 ஆம் ஆண்டில் ஆணைக்குழு தோற்றுவிக்கப்பட்ட திகதியிலிருந்து கைப்பற்றப்பட்ட காணிகள் தொடர்பான அக்காணிகளின் ஏக்கர் அளவு, ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள பிரதேசம், கைப்பற்றப்பட்டது யாரிடமிருந்து, தற்பொழுது பயன்படுத்தும் உரிமை ஒப்படைத்தல் என்பன தொடர்பான விபரங்களும் உரிய வர்த்தமானி அறிவித்தல்களும் மற்றும் காணிகளை அகற்றுதலுக்குரிய | சபையில் முறைப்படியாக நாளதுவரையாக்கப் பட்ட ஒரு காணிப் பதிவேடு இல்லாமையும் ஒவ்வொரு காணியின் உறுதியான கிரயப் பெறுமதி அப்பதிவேட்டில் காட்டப்படாமையும் | நாளதுவரையாக்கப்பட்ட ஒரு காணி பதிவேட்டை பேணுதல் வேண்டும். இன்று வரை நாளதுவரையான பதிவேடு பேணப்படாமை சம்பந்தமாக அதற்குப் பொறுப்புக் கூறக் கூடிய |

| | | |
|---|---|---|
| முழுமையான விபரங்களை உள்ளடக்கிய ஒரு பதிவேடு நிறுவனத்தினால் பராமரிக்கப்படாததுடன் அது தொடர்பாக துணை ஆவணங்களின் மூலம் விளக்கமளிப்பதற்கும் நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 676,169,345 தொகையான பொறுப்பேற்கப்பட்ட காணிகளின் உள்ளமை மற்றும் மதிப்பீடு செய்தலின் சரியான தன்மையை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | மற்றும் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் கிரயத்தை உறுதியான கிரயப் பெறுமதி அப்பதிவேட்டில் காட்டப்படாமையும் மற்றும் விற்பனை செய்யப்பட்ட காணிகளின் கிரயத்தை உறுதியாக கண்டுபிடித்துக் கொள்ளாமையும் | உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | கட்டிடங்களும் மோட்டார் வாகனங்களும் | 82,656,308 | மீளாய்வு அறிக்கையும் துணைப் பதிவேடுகளும் | இக்கட்டிடத்தின் பெறுமதியில் ரூபா 4,207,821 விபரமான தகவல் இன்றி 2009 ஆம் ஆண்டின் போது முன்கொண்டுவரப்பட்ட மீதியாகும். துணைச் சான்றுகளை தேடிக்கண்டு பிடிக்கமுடியாதுள்ளது. எஞ்சிய ரூபா 9,876,662 இற்காக துணைச்சான்றுகளை தேடிக்கண்டுபிடிக்க | கட்டிடங்கள் தொடர்பான துணைப் பதிவேட்டை தயாரித்தல் மற்றும் வருடாந்த பொருள் மெய்மை யாய்வினைச் செய்து பெறுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | முடியவில்லை. அப்பெறுமதியானது அக்கட்டிடத்தை மறுசீரமைப்புச் செய்த 2019 ஆம் ஆண்டில் செலவுகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் மோட்டார் வாகனப் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய குத்தகை வாடகை | 16,708,318 | ஆரம்ப மீதியின் வித்தியாசத்திற்காக நாட்குறிப்பு பதிவுகளின் செம்மையாக்கல் களுக்குரிய விபரம் | குத்தகைதாரரினால் உரிய நிலுவையான குத்தகைப் பணம் மாவட்ட அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கான பற்றுச்சீட்டுக்கள் தலைமை அலுவலகத்தின் வருமானப் பிரிவிற்கு தாமதித்து கிடைத்ததன் காரணமாக அது கடந்த வரி ஆண்டின மீதிக்குரிய பேரேட்டில் செம்மையாக்கல் மேற்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் ஆரம்ப மீதி மாற்றமடைந்துள்ளது. | நாட்குறிப்பு பதிவின் மூலம் செம்மையாக்கும் போது அதற்குரிய விபரம் நாட்குறிப்பு வவுச்சர்களுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 13 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டுவரும் 8 அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,135,625,246 பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியான தகவல்களை முறையாகத் தேடிப்பார்ப்பதற்குள்ள சிக்கலின் காரணமாக சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது. கடன்பட்டோர் பணம் சம்பந்தமான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய பிரிவுகளிலிருந்து சரியான தகவல்களைப் பெற்றுக் கொண்டு அறவீடு செய்வதற்கான நடவடிக்கையை விரைவாக செய்தல் வேண்டும். |
| (ஆ) | 1999 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் ரூபா 2,311,017 பெறுமதியான 08 கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கோவைகளை முறையாக தேடிப்பார்ப்பதற்குள்ள சிக்கலின் காரணமாக சரியான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதுள்ளது. கடன்பட்டோர் பணம் சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய பிரிவுகளிலிருந்து சரியான தகவல்களைப் பெற்று அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவாகச் செய்தல் வேண்டும். |

## 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | வணிக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியதன் கீழ் காட்டப்பட்டுள்ள 07 நிறுவனங்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 777,917 முற்பணங்கள் மற்றும் ஏனைய விடயங்களின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் நிறுவனத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு அவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இச்செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகள் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைமையானதாக இருந்ததனால் குறிப்பான மீதிகளின் உறுதிப்படுத்தல் களைப் பெற்றுக் கொள்ளாது செலுத்த முடியாது என்பதுடன் இன்று வரை கடன் கொடுத்தோர் மீதிக்குரிய எதுவித உறுதிப்படுத்தல்களும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை | விரைவாகச் சிக்கல்களைத் தீர்த்து முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள ரூபா 13,580,850 பெறுமதியான முற்பணங்கள் 7 ஆண்டுகளிலிருந்து 13 ஆண்டுகள் வரையான காலத்தை மிகைத்திருந்ததும் மீளாய்வாண்டு வரை தீர்த்து வைப்பதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2002-2004 கால எல்லையில் குத்தகை அடிப்படையில் வழங்கி பின்னர் அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் தடை செய்யப்பட்ட காணிகளுக்காக அறவிடப்பட்ட முற்பணமானது காணிப் பிரச்சினையை முறைப்படியாக தீர்த்து வைக்காமையின் அடிப்படையில் தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளது. | விரைவாகச் சிக்கல்களுக்கு தீர்வு கண்டு முற்பணங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் காணிகளை விற்பனை செய்த போது பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,702,992 பெறுமதியான முற்பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்த்து வைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வேண்டப்பட்டுள்ளதுடன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | விரைவாக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2005 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வித்தியாசமின்றி காணப்பட்ட ரூபா 109,959,493 பெறுமதியான இழப்பீடு தொங்கல் II கணக்கின் செலவு மீதியைத் தீர்த்து வைப்பதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த தங்க நகைகள் தோட்டங்களுக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அண்மைக் காலத்தில் இழப்பீட்டுக் கொடுப்பனவு இடம்பெற்றிருக்கவில்லை. | தகவல்களைத் தேடிப் பார்த்து உரிமையாளர்களுக்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (அ) நிதிப்பிரமாணம் 756 மற்றும் 757 | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 2,551,710 பெறுமதியான எழுதுகருவி மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எழுதுகருவி இருப்புகக்குரிய விபரம் களஞ்சியத்தினால் பேணப்பட்டு வந்த பேரேட்டின் மூலம் உறுதிப்படுத்தப் படலாம். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் எழுதுகருவிகளின் இருப்பு சம்பந்தமாக மீளாய்வு செய்து பௌதீக ரீதியாக உள்ளமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 371(5) | செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட 10 நாட்களுக்குள் உப கட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆம் ஆண்டின் 02 சந்தர்ப்பங்களின் போதும் மீளாய்வாண்டில் 59 சந்தர்ப்பங்களின் போதும் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 3,210,180 பெறுமதியான முற்பணங்களினைத் தீர்த்து வைப்பதற்கு 16 நாட்களிலிருந்து 397 நாட்கள் வரையான காலம் எடுத்திருந்தது. | உத்தியோகத்தர்களின் வேலைப் பழுவின் காரணமாகவும், காணி உறுதி வழங்கும் விழாவை நடாத்தியதன் காரணமாகவும் முற்பணங்களைத் தீர்த்து வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முற்பணங்களினை வழங்குதல் மற்றும் தீர்த்து வைத்தல் தொடர்பாக நிதிப்பிரமாணத்திற் | நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் முற்பணங்கள் செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 2.5.3 ஆம் பந்தி | இரண்டாம் நிலை அடிப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் இருப்பிடபடி மற்றும் உபசரிப்பு படிகளுக்கு தகைமையற்றவர்களாக இருந்த போதிலும், இரண்டாம் நிலை அடிப்படையில் நிமங்களைப் பெற்ற ஒரு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 540,000 இருப்பிட மற்றும் உபசரிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. | துரித காணி உறுதி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது கடமைகளை நிறைவேற்றும் தேவைப்பாட்டின் பேரில் ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 யூன் 17 ஆந் திகதிய PED 3/2015 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் இருப்பிட மற்றும் உபசரிப்பு படிகளுக்கு தகைமையற்றிருந்தும் தலைவர் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு அப்படிகளாக ரூபா 1,200,000 மொத்த தொகை மீளாய்வாண்டின் | துரித காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது கடமைகளை நிறைவேற்றும் தேவைப்பாட்டின் பேரில் ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போது செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2000 சனவரி 11 ஆந் திகதிய PF/PE5 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாது பதவிநிலைத் தரம் அற்ற உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 2,000 வீதம் ரூபா 10,293,933 விசேட படியும் பதவிநிலைத் தரமான உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை தின சம்பளத்திற்கு மேலதிகமாக விசேட படி மற்றும் பதவி நிலைத்தரம் அற்ற உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரித்த மேலதிக நேர வேலை மணித்தியாலயத்திற்கு மேலதிகமாக வேலை செய்கின்ற மணித்தியாலத்திற்கு ரூபா 8,450,714 படியும் செலுத்தப்பட்டிருந்தது. | துரித காணி உறுதி வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு அனைத்து பதவியணியினர்களும் பங்களிப்பை வழங்கியமை, அலுவலக நேரத்திற்குப் பின்னர் மற்றும் வார இறுதி, விடுமுறை தினங்களில் கடமைகளை நிறைவேற்றியமைக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். |
| (ஊ) | 2004 யூலை 29 ஆந் திகதிய PED 25 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | அரசாங்க தொழில் முயற்சிகளின் மிகை நிதிகளை முதலீடு செய்வதற்கு நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்ட வேண்டிய போதிலும், அவ்வாறு இன்றி ரூபா 1,756,679,568 தொகையான மிகை | அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் விடயங்களைத் தெரிவித்து பல சந்தர்ப்பங்களில் அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்தும் இன்று வரை | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தைப் பெற்று மிகை நிதிகளை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதிகள் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | உரிய அங்கீகாரம் கிடைத்திருக்க வில்லை. | |
| (எ) | 2017 பெப்ரவரி 17 ஆந் திகதிய ஆணைக்குழுத் தீர்மானம் (பத்திர இலக்கம் 9676) | கருங்கல் காணியை குத்தகைக்கு வழங்கும் ஒரு ஆண்டு காலத்திற்கு அமுல்படுத்தும் வகையில் எழுத்து மூலக் குத்தகை உடன்படிக்கை வழங்கப்பட வேண்டிய போதிலும், குத்தகைக்கு வழங்கப்படுதலானது மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் பணியகம் ஆகிய ஏனைய நிறுவனங்களின் சிபார்சின் பேரில் செய்யப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு வரை குத்தகை உடன்படிக்கை மற்றும் உரிய சிபார்சுகள் இன்றி கருங்கல் காணி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | நிகழ்காலத்தில் இந்த நிறுவனங்களின் சிபார்சுகளின்றி உரிய செயற்திட்டத்திற்காக ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஆணைக்குழுப் பத்திரம் சமர்ப்பிக்கப் படுவதில்லை. ஒரு ஆண்டு காலத்திற்கு அமுல்படுத்தும் வகையில் உடன்படிக்கையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய நிறுவனங்களின் சிபார்சுகளைப் பெற்று உடன்படிக்கை செய்ததன் பின்னர் கருங்கல் காணிகள் குத்தகைக்கு வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | 2018 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான சுற்றறிக்கையின் சிபார்சுகள் | பாராளுமன்ற தெரிவுக் குழுவினால் வழங்கப்பட்ட பின்வரும் சிபார்சுகள் 2019 ஆகஸ்ட் வரை அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை.<br>i. தற்பொழுது பதிவேடுகளுக்கு | கடன்பட்டோர் மீதிகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் சிபார்சின் பிரகாரம் உரிய காலப்பகுதிக்குள் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ii. | கொண்டு வரப்பட்டுள்ள காணிகள் 10 இலட்சம் ஏக்கர்கள் என்பது பிழையானது என்பதனால் அதனை முறைப்படியாக பட்டியல்படுத்துவதற்காக விசேட செயலாற்றல் படையணியைத் தோற்றுவித்தல்.<br>ஆவணங்களிலுள்ள குறைபாடுகளின் காரணமாக 2 பில்லியன் தொகையான அறவிட முடியாத கடன் மீதிகள் சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற நடைமுறைகள் தொடர்பாக ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தல். | எடுத்தல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2008 மார்ச் 03 ஆந் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரி செயற்பாடுகள் சுற்றறிக்கையின் பிரகாரம் இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட | ஒரு ஆண்டு காலத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள இப் பணத்தில் ஒரு பகுதி அல்லது ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக முதலீடு செய்வதற்கு அரசாங்க | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | காலத்திற்கான நிலையான வைப்புக்களில் பணம் வைப்புச் செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் ஆணைக்குழுவினால் ரூபா 1,562,268,068 பணம் 97 நிலையான வைப்புக்களின் கீழ் உச்ச அளவு ஒரு ஆண்டு காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தொழில் முயற்சிகள் திணைக்களத்திடம் வேண்டுதல் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை அதற்காக அங்கீகாரம் வழங்கப்படவில்லை. | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 07 சந்தர்ப்பங்களின் போது ரூபா 110,000,000 பணம் ஒரு ஆண்டினை விட குறைந்த காலப்பகுதிக்கு ஆகக் குறைந்த வட்டி வீதத்தில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ஒரு ஆண்டிற்கு வைப்புச் செய்யப்பட்டிருக்குமானால் பெற வேண்டியதாக இருந்த வட்டிப் பணமாகிய அண்ணளவாக ரூபா 825,000 வருமானத்தை உழைக்க கூடியதாக இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | ஏதாவது சந்தர்ப்பத்தில் ஆணைக் குழுவிற்கு இழப்பீட்டினைச் செலுத்துவதற்கு வேண்டிய எற்படுமாகவிருந்தால் நிலையான வைப்பு முதிர்சியடையும் வரை இருக்காது மீளப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையான வைப்புக்களில் ஒரு பகுதி ஆண்டிற்கு குறைந்த காலத்திற்காக முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அதிக வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் முதலீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 121,635,246 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 202,512,913 ஆகும். அதற்கிணங்க, மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 80,877,667 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் இந்த வீழ்ச்சிக்கு அடிப்படையாக கருங்கல் வருமானம் மற்றும் மிகைக் கட்டண வருமானம் குறைவடைந்தமை பிரதானமாக காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான இரணவில வத்த காணியில் 2000 ஆம் ஆண்டிலிருந்து உத்தரவின்றி பயன்படுத்தப்பட்டு வந்த 40 ஏக்கர் அளவான காணி 10 தனிப்பட்டவர்களால் இறால் வளர்ப்பிற்காக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய காணியை சட்டரீதியாக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் வரை 2014 ஆம் ஆண்டிலிருந்து ஒரு ஏக்கருக்கு ரூபா 10,000 வீதம் அறவீடு செய்வதற்கு தலைவரின் அங்கீகாரத்தின் பேரிலும் அதிகாரச் சட்டத்தின் 22(1)(அ) ஆம் பிரிவின் பிரகாரமும் 2000 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் படி 2001 சனவரி 17 ஆந் திகதியிலிருந்து குத்தகை அடிப்படையில் காணியை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தும் 2018 திசெம்பர் வரை அத்தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குத்தகைப் பணத்தை செலுத்த தவறியுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கலந்துரையாடலின் மூலம் தீர்மானிக்கப் பட்டுள்ளது. | நிறுவனம் அறவிட வேண்டியுள்ள குத்தகைப் பணத்தை நிர்ணயிக்கப்பட்டவாறு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள குசல பீ வத்த காணியில் 59 ஏக்கர்கள் அளவானவை 1994 ஆம் ஆண்டில் ஒரு தனியார் கம்பனிக்கு இறால் வளர்க்கும் செயற்திட்டத்திற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தும் 1999 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரை செலுத்துவதற்கு எஞ்சியுள்ள நிலுவைப் குத்தகைப் பணம் ரூபா 850,000 ஆக இருந்ததுடன் கம்பனியால் 2004 ஆம் ஆண்டிற்கான குத்தகை உடன்படிக்கையை பிணையாக வைத்து வங்கி கடனைப் பெற்று அக் கடன் பணத்தை வங்கிக்கு மீளச் செலுத்தாமையின் காரணமாக 2011 ஆம் ஆண்டிற்கான குத்தகை உரிமை வங்கிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக ஆணைக்குழு சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் 2018 ஆம் ஆண்டு வரை அறவிட வேண்டியிருந்த ரூபா 8.166,687 தொகையான குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகைப் பணத்தை செலுத்த தவறியுள்ள நபர்கள் மற்றும் நிறுவனங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு கலந்துரையாடலின் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தின் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க காணிகளை குத்தகைக்கு வழங்குதல் பின் தொடர் நடவடிக்கை எடுத்தல், குத்தகை செலுத்தாதவர்கள் சம்பந்தமாக நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கும்புட்டு குலிய வத்த எனும் பெயருள்ள காணியில் 74 ஏக்கர் 02 ரூட் 23 பேர்ச்சஸ் அளவானவை இறால் பண்ணைக்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு 2009 நவம்பர் 10 ஆந் திகதி 30 ஆண்டுகள் காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு வரை மேற்கூறிய செயற்திடடம் அமுல்ப்படுத்தப் பட்டிருக்காததனால் 2014 ஆகஸ்ட் வரை காணியை பயன்படுத்தும் உரிமையை மாத்திரம் ஆணைக்குழு மீளப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தும் 1998 சனவரியிலிருந்து 2014 ஆகஸ்ட் வரை அறவிட வேண்டிய ரூபா 8,250,000 நிலுவையான குத்தகைப் பணம் 2019மே 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | கம்பனிக்கு எதிராக மாவட்ட நீதி மன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. | மாவட்ட செயலகத்தின் மூலம் உரிய மாவட்டங்களிலுள்ள காணிகள் சம்பந்தமான மேற்பார்வை மற்றும் பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பெறவேண்டிய பணத்தை விரைவாகப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | 2002 இலிருந்து 2004 வரை ஆணைக்குழுவின் செயற்திட்டத்திற்காக காணிகளை குத்தகைக்கு வழங்கும் நடைமுறைகளுக்கு முரணாக காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டில் அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் அந்த நடைமுறை தடை செய்யப்பட்டிருந்தது. அக்காணிகளுக்கு பயன்படுத்தும் உரிமையை | 2018.08.23 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கலந்துரையாடலின் பிரகாரம் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் தீர்மானம் அமுல்ப்படுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைத்தல் மற்றும் பயன்படுத்துவதற்கான உரிமை ஒப்படைப்புச் செய்யப்படாதவை என்பனவாக 02 விதிகளாக பட்டியல்படுத்தப்பட்டிருந்தது. உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு மத்தியில் 760 ஏக்கர் 31 பேச்சஸ் மீள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. பயன்படுத்தும் உரிமை ஒப்படைக்கப்படாத 1689 ஏக்கர்களுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை அந்த வேண்டுதல் விடுத்தவர்களுக்கு மீள்வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அக்காணிகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | களுத்துறை மாவட்ட அதிகார சபையின் வெளிக்களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டவாறு காணி உறுதிகளை வேண்டுதல் செய்யும் பதிவேட்டின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 செம்தெம்பர் மாதம் வரை 467 நபர்கள் உறுதிகளை வேண்டுதல் செய்திருந்தும் உரிய காலப்பகுதியில் 24 உறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. மேலும், அந்த மாவட்டத்தில் மீளாய்வாண்டு வரை குடியிருந்த 4213 அத்து மீறிய | பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள உறுதிகளின் எண்ணிக்கை 2027 ஆக காட்டப்பட்டிருந்து அத்துமீறிய குடியிருப்பாளர்களை ஒழுங்குமுறைப்படுத்து வதற்குரிய மேலதிக நடவடிக்கையானது உறுதி வழங்கும் நடைமுறையின் கீழ் விரைவாக மேற்கொள்ளப் படுகின்றது. | காணிகளை கோரியுள்ள நபர்களுக்கு உறுதிகள் வழங்கப்படுதல் வேண்டும். அத்து மீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளுக்கு அனுமதியற்றவர்களை தவிர்த்தலும் |

| | | |
|---|---|---|
| குடியிருப்பாளர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்யப்படுதல் வெண்டும் |
| (ஊ) நுவரெலியா மாவட்டத்தில் 05 ஏக்கர் காணியில் உத்தரவின்றி 10 ஆண்டுகளிற்காக பழங்கள் பயிர்ச்செய்கை செய்யப்பட்டிருந்ததுடன் அத்துமீறியவர்களால் குத்தகை உறுதியை வழங்குமாறு 2002 ஆம் ஆண்டில் கடிதத்தின் மூலம் வேண்டப்பட்டிருந்தும் காணியின் பயன்படுத்தும் உரிமையை சட்டரீதியாக ஒப்படைப்பதற்கு அல்லது மீளப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்காததனால் காணியிலிருந்து உழைக்கக் கூடியதாக இருந்த 16 ஆண்டுகளுக்கான வருமானம் ஆணைக்குழுவினால் இழக்கப்பட்டிருந்தது. | தெளிவான பதில்கள் வழங்கப்படவில்லை. | உரிய காணிகள் தொடர்பாக பரீசீலனைகளை மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கை எடுக்காததன் காரணமாக பொறுப்பான உத்தியோகத்தர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| (அ) பத்து இலட்சம் காணி உறுதிகள் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 60,000 உறுதிகளை 03 ஆண்டுகள் காலத்திற்குள் வழங்குவதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 219 மில்லியனாக | முன்னர் இடம் பெற்ற பலவீனங்களை இல்லாமல் செய்து நிகழ்காலத்தில் உறுதிகளை பகிர்ந்தளிக்கும் விழா சந்தர்ப்பத்தில் ஆகக் குறைந்த கிரயத்தை மேற்கொண்டு அதிகளவான | திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளுக்கு இணங்க சின்னமாக செலவுகளை மேற்கொண்டு அதற்குப் பொருத்தமாக செயலாற்றலை |

| | | |
|---|---|---|
| இருந்ததுடன் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை ஆணைக்குழுவினால் 2,712 உறுதிகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 90,915,043 ஆகும். அதற்கிணங்க ஒரு உறுதியை வழங்குவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 3,650 ஆக இருந்த போதிலும் ஆணைக்கழுவினால் செலவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 33,523 ஆகும். | உறுதிகளைப் பகிர்ந்தெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு வருடாந்த பெறுகைத் திட்டம், மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பவறறை உள்ளடக்கிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டவாறு அடுத்துவரும் ஆண்டுகளுக்காக செயல் நடவடிக்கைத் திட்டங்களைத் தயாரிக்கும் போது உரிய அனைத்து விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி சரியாக அமுல்ப்படுத்தக் கூடிய | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதி 1/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அவ்வாறான திட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டத்தை தயாரிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரிவுபடுத்தப்பட்டுள்ளது. என தெரிவிக்கிறேன். | |
| (ஆ) | 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டறிக்கைகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்துடன் 2017 ஆம் ஆண்டிற்கான மொழி பெயர்ப்பு இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். |